www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

2RM

# இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2023

**12** - ஆம் வகுப்பு

## வணிகவியல்

Madurai Dist 15/02/23

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

பிரிவு - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 20 X 1 = 20

1. அறிவியல் பூர்வ மேலாண்மை கோட்பாட்டை உருவாக்கி வளர்த்தவர்
அ) ஃபேயல் ஆ) டேலர் இ) மேயோ ஈ) ஜேக்கப்

2. மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது எது?
அ) புதுமைப்படுத்துதல் ஆ) கட்டுப்படுத்துதல் இ) திட்டமிடுதல் ஈ) முடிவெடுத்தல்

3. ஒரு இரண்டாம் நிலைச் சந்தையில் ஒரு பத்திரம் எத்தனை முறை விற்கப்படலாம்
அ) ஒரே ஒரு முறை ஆ) இரண்டு முறை இ) மூன்று முறை ஈ) பல முறை

4. NSEI தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
அ) 1990 ஆ) 1992 இ) 1998 ஈ) 1997

5. பணச்சந்தை வழங்குவது .............. .
அ) நடுத்தர கால நிதிகள் ஆ) குறுகிய கால நிதிகள் இ) நீண்டகால நிதிகள் ஈ) பங்குகள்

6. பங்குச் சந்தை ............ வியாபாரத்தை அனுமதிக்கிறது?
அ) நிறுவனங்களின் அனைத்து வகையிலான பங்குகள் ஆ) அரசாங்கம் வெளியிடும் பத்திரங்கள்
இ) பட்டியலிடப்பட்ட பத்திரங்கள் ஈ) பட்டியலிடப்படாத பத்திரங்கள்

7. மனித வளம் என்பது ஒரு ..................... சொத்து. அ) கண்ணுக்கு புலனாகும்
ஆ) கண்ணிக்கு புலனாகா இ) நிலையான ஈ) நடப்பு

8. ஆட்சேர்ப்பு என்பது ................. மற்றும் ..............க்கு இடையே பாலமாக இருக்கிறது
அ) வேலை தேடுபவர் மற்றும் வேலை வழங்குபவர் ஆ) வேலை தேடுபவர் மற்றும் முகவர்
இ) வேலை வழங்குநர் மற்றும் உரிமையாளர் ஈ) உரிமையாளர் மற்றும் வேலைக்காரன்

9. தேர்வு பொதுவாக ஒரு ................. செயலாக கருதப்படுகிறது
அ) நேர்மறை ஆ) எதிர்மறை இ) ஒழுங்குமுறை ஈ) இவை ஒன்றும் இல்லை

10. உடனடி சந்தை எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது
அ) பொருட்கள் ஆ) பரிவர்த்தனை இ) ஒழுங்குமுறை ஈ) காலம்

11. சந்தையிடுகை முறையின் ஆரம்ப நிலை ............... .
அ) முற்றுரிமை முறை ஆ) பணத்திற்கு மாற்றுதல் இ) பண்டமாற்று முறை ஈ) தற்சார்பு உற்பத்தி

12. நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார்?
அ) மகாத்மா காந்தி ஆ) ஜான் எப்.கென்னடி இ) ரால்ப் நேடர் ஈ) ஜவஹர்லால் நேரு

13. ஜான் F கென்னடி அவர்களின் கூற்றுப்படி பின்வருவனவற்றில் நுகர்வோர் உரிமையில் இடம் பெறாதவை எது?
அ) பாதுகாப்பு உரிமை ஆ) தேர்ந்தெடுக்கும் உரிமை இ) நுகரும் உரிமை ஈ) தெரிவிக்கும் உரிமை

14. ............. புதிய தொழிற்துறைக் கொள்கையின் விளைவாகும், இதனால் உரிமம் முறை அகற்றப்பட்டது.
அ) உலகமயமாக்கல் ஆ) தனியார்மயமாக்கல் இ) தாராளமாயமாக்கல் ஈ) இவற்றில் எதுவுமே இல்லை

15. **பொருத்துக.**
தொழில் சார்ந்த தொழில் முனைவோர் - 1) ஜே.ஆர்டி டாடா
தெளிவான தொழில் முனைவோர் - 2) என்.ஆர்.நாராயண மூர்த்தி
தன்னிச்சை தொழில் முனைவோர் - 3) ஷிவ் நாடார்
பாரம்பரிய தொழில் முனைவோர் - 4) ரிலையன்ஸ்
அ) 1, 2, 3, 4 ஆ) 4, 3, 2, 1 இ) 3, 4, 2, 1 ஈ) 2, 3, 1, 4

16. ............... ஒப்பந்தத்திற்கு உறுதுணையாக இருக்கும் நிபந்தனை
அ) நம்புறுதி ஆ) நிபந்தனைகள் இ) உரிமை ஈ) உடன்பாடு

17. ***கூற்று (A) :*** நுகர்வோர் தங்கள் உரிமைகள் மற்றும் சலுகைகளைப் பற்றி அறியாமலேயே பொதுவாக சுரண்டப்படுகிறார்கள்.
***காரணம் (R) :*** ஏனெனில் தயாரிப்புகளையும் சேவைகளையும் பற்றிய விழிப்புணர்வு இல்லை
அ) (A) மற்றும் (R) இரண்டு சரி மேலும் (R) என்பது சரியான விளக்கம்
ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது சரியான விளக்கம் அல்ல
இ) (A) தவறு ஆனால் (R) சரி ஈ) (A) சரி (R) தவறு



Scanned with OKEN Scanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

18. ......... நிதி ஆதாரங்கள், தொழில் நுட்ப அறிவு, தொழிலாளர் ஆதாரங்கள் மற்றும் மூலப்பொருட்கள், சந்தை திறன் மற்றும் இலாபகத்தன்மை ஆகியவற்றை ஆதாரங்களைக் கொண்டிருக்கிறது.
அ) தொழில் நுட்ப ஆ) ஸ்டாட்டப் இந்தியா இ) திட்ட அறிக்கை ஈ) வளர்ச்சி அறிக்கை
19. கீழ்குறிப்பிடப்பட்டவைகளில் எது உற்பத்திக் காரணி?
அ) நிலம் ஆ) உழைப்பு இ) தொழில்முறை ஈ) மேற்கூறிய அனைத்தும்
20. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும்.
அ) வாக்கு சீட்டு முறை ஆ) அஞ்சல் வாக்கு இ) எந்திர வாக்குப்பதிவு முறை ஈ) குரல் வாக்கெடுப்பு

## பிரிவு - II

**குறிப்பு : எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண். 30 - க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 7 x 2 = 14

21. மாற்றுமுறை ஆவணம் என்றால் என்ன?
22. நிகழ் சரக்கு என்றால் என்ன?
23. ஒழுங்குமுறை சந்தை என்றால் என்ன?
24. "பகராள்" சிறுகுறிப்பு வரைக.
25. தனியார் மயமாக்கல் என்றால் என்ன?
26. கலப்படத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
27. ஆட்சேர்ப்பின் பொருள் தருக.
28. மனித வள மேலாண்மை என்றால் என்ன?
29. மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக.
30. "ஒரு வாடிக்கையாளர் நம் வளாகத்தில் மிக முக்கியமான பார்வையாளர் ஆவார்". அவர் நம்மை சார்ந்து இருக்கவில்லை. நாம் அவரைச் சார்ந்து இருக்கிறோம் என்று சொன்னவர் யார்?

## பிரிவு - III

**குறிப்பு : எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண். 40 - க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 7 x 3 = 21

31. தனியிடச்சந்தை என்றால் என்ன?
32. எழுந்திரு இந்தியா என்றால் என்ன?
33. சிறப்பு தீர்மானம் என்றால் என்ன?
34. தாராளமயமாக்கல் என்றால் என்ன?
35. ஆரோக்கயம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பாதுகாப்பு உரிமைகள் பற்றி நீவிர் அறிவது என்ன?
36. செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன?
37. மன அழுத்த நேர்காணல் என்றால் என்ன?
38. தொழில் முனைவோரின் வணிகப் பணிகளைக் குறிப்பிடுக.
39. தரமுடைய பொருட்கள் வாங்கும் போது நுகர்வோர் மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள் யாவை?
40. புதின படைப்பாளி என தொழில் முனைபவரை அழைத்தவர் யார்? என்?

## பிரிவு - IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 x 5 = 35

41. நிபந்தனை மற்றும் நம்புறுதிகளை வேறுபடுத்துக. *(அல்லது)*
ஏதேனும் ஐந்து அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தினை விளக்குக.
42. மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவாதிக்க. (ஏதேனும் ஐந்து) *(அல்லது)*
புவியியல் அடிப்படையில் சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது? விவரி.
43. நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்? *(அல்லது)*
நிறும பங்குநர் கூட்டங்களை விளக்கு.
44. ஆட்சேர்ப்பில் முறையில் உள்ள புற வளங்களை விளக்குக. *(அல்லது)*
மனித வள மேலாண்மையின் மேலாண்மைப் பணிகளை விவரி.
45. சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சி பற்றி விவரி. *(அல்லது)*
நுகர்வோரின் கடமைகளை விளக்குக.
46. மேலாண்மையின் முக்கிய பணிகளை விளக்குக. *(அல்லது)*
தாராளமயமாக்கல் நன்மைகள் பற்றி விளக்குக.
47. நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி. *(அல்லது)*
பல்வேறு வகையான நிதிச் சந்தைகளை விவரிக்க.



Scanned with OKEN Scanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

## +2 வணிகவியல் II Rev Mdu Dist. Feb -23

**சரியான விடை**

1. (ஆ) டேலர்
2. (இ) திட்டமிடுதல்
3. (ஈ) பலமுறை
4. (ஆ) 1992
5. (ஆ) குறுகியகால நிதிகள்
6. (இ) பட்டியலிடப்பட்ட பத்திரங்கள்
7. (ஆ) கண்ணுக்குப் புலனாகா
8. (அ)வேலைதேடுபவர் மற்றும் வேலை வழங்குநர்
9. (ஆ) எதிர்மறை
10. (ஆ) பரிவர்த்தனை
11. (இ) பண்டமாற்று முறை
12. (ஈ) ரால்ப் நேடர்
13. (இ) நுகரும் உரிமை
14. (இ) தாராளமயமாக்கல்
15. (அ) I, ii, iii, iv
16. (அ) நம்புறுதி
17. (அ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான விளக்கம்
18. (இ) திட்ட அறிக்கை
19. (ஈ) மேற்கூறிய அனைத்தும்
20. (ஈ) குரல் வாக்கெடுப்பு

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. மாற்றுமறை ஆவணம்:** கே.சி. வில்ஸ் என்பவரின் கருத்துப்படி ஒருவர் நன்னம்பிக்கையில் மற்றும் மறுபயன் கருதி தான் யாரிடமிருந்து பெற்றாரோ அவரின் உரிமையில் பழுது இருந்த போதிலும் எந்த முறை ஆவணத்தின் மீதான உரிமையைபெறுகிறாரோ அந்த ஆவணமே மாற்றுமறைஆவணம் ஆகும்.

**22. நிகழ் சரக்கு:** இது ஒரு வகை எதிர்கால சரக்கு ஆகும். இது விற்பவர் கைவசம் வந்து சேர்வது, எதிர்காலத்தில் நடக்கும், நிகழ்ச்சியைப் பொறுத்தது.

**23. ஒழுங்குமுறை சந்தை:** அரசின் சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு செயல்படும் சந்தை அரசால் கட்டுப்படுத்தப்படும் சந்தை ஒழுங்குமுறை சந்தை ஆகும்.

**24. பகராள்:** நிறுமக் கூட்டத்தில் ஒரு பங்குநரின் பிரதிநிதியாக செயல்பட்டு பங்குநரின் முடிவுகளை செயல்படுத்தும் முகவரை பகராள் எனலாம். இவர் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும். ஆனால் வாக்களிக்க முடியாது.

**25. தனியார்மயமாக்கல்:** பொதுத் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களை தனியார் துறைக்கு மாற்ற அனுமதி அளிப்பதாகும்.

**26. கலப்படத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.** தேங்காய் எண்ணெயில் பாமாயில் கலப்பது. மிளகுடன் பப்பாளி விதை சேர்ப்பது.

**27. ஆட்சேர்ப்பின் பொருள் தருக.** ஒரு நிறுவனத்தில் உள்ள பல்வேறு பணியிடங்களுக்கு பொருத்தமான நபர்களை தேர்ந்தெடுக்கும் பணி செயல் முறை ஆட்சேர்ப்பு ஆகும்.

**28. மனிதவள மேலாண்மை** என்பது நிர்வாக செயல்பாட்டின் ஒரு பகுதியாகும். மேலும் அவை ஒரு நிறுவனத்தின் மனிதக் கூறுகளை முதன்மையாகக் கருத்தில் கொண்டுள்ளது. **EFL ப்ரெச்.**

**29. மேலாண்மைக் கருவிகளை பட்டியலிடுக?** கணக்கியல், வணிகச்சட்டங்கள், உளவியல், புள்ளியியல், பொருளியியல், தரவுச் செயலாக்கம்

**30. மகாத்மா காந்தி**

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி : 7X3=21**

**31. தனியிடச்சந்தை பற்றி விளக்குக.** உண்மையில் இது ஒரு சந்தையே அல்ல. குறிப்பிட்ட ஒரு பிரிவு வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய தேவையான அனைத்து முயற்சிகளின் செயல்பாடாகும். எ.கா: விளையாட்டுச் சேனல்கள் அதற்காக மட்டும் ஏற்படுத்தப்படுகிறது.

**32. எழுந்திரு இந்தியா (ஸ்டாட்டப் இந்தியா)** தொடக்க நிலையில் உள்ள தொழில்கட்கு ஆலோசனை வழங்குவது, வளர்ப்பது, ஆதரவு அளிப்பது, போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்வதாகும். இது 2016ம் ஆண்டு சனவரியில் துவங்கியது. நிதிகளின் நிதியின் மூலம் நிதி வசதி அளிக்கிறது.

**33. சிறப்புத் தீர்மானம்:** ஒரு முடிவை நிறைவேற்ற கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள பங்குநர்கள் எண்ணிக்கையில் 75 சதவீதம் நபர்கள் முடிவிற்கு சாதகமாக வாக்களித்தால் அது சிறப்புத் தீர்மானம் ஆகும்.

**34. தாராளமயமாக்கல்** என்பது வணிக நடைமுறைகளில் உள்ள சட்டதிட்டங்களை அல்லது வழிகளை பொருளாதாரத்தில், சந்தை நல்ல நிலையை அடைய அரசாங்கம் கட்டுப்பாடுகளை தளர்த்துவது ஆகும்.

**35. ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பாதுகாப்பு உரிமைகள் பற்றி நீவிர் அறிவது யாது?** தற்போதைய சட்டங்கள் பாதுகாப்பில்லாத பொருட்களை தயாரிப்பதோ அல்லது விற்பனை செய்வதோ கூடாது என்ற கடமை விற்பனையாளர்களுக்கும் மற்றும் உற்பத்தி செய்பவர்களுக்கும் உள்ளது.

**36. செயற்கைப் பற்றாக்குறை:** வணிகர்கள் தேவைக்கு அதிகமான அளவு சரக்குகளை இருப்பு வைத்திருந்தாலும் கூட தங்கள் கடைகளின் முகப்பில் இருப்பு இல்லை எனும் பெயர் பலகையை வைப்பது செயற்கைப் பற்றாக்குறை ஆகும்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

**37. மன அழுத்த நேர்காணல்:** விண்ணப்பதாரரிடம் வேண்டும் என்றே மன அழுத்தம் தரும் வகையில் கேள்விகள் கேட்கப்படும், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் அழுத்தத்தை சமாளிக்கும் திறனை சோதிக்க இத்தகைய நேர்காணல் நடத்தப்படுகிறது.

**38. .தொழில் முனைவோரின் வணிகப் பணிகளைக் குறிப்பிடுக.** உற்பத்தி அல்லது தயாரிப்புப்பணி, சந்தையிடுகைபணி, கணக்கியல்பணி, நிதிசார்பணி, மனித வள பணி

**39. தரமுடைய பொருட்கள் வாங்கும் போது நுகர்வோர் மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள் யாவை?**
நுகர்வோர் ISI, அக்மார்க் FPO போன்ற தரக்குறியீடு சான்றுகள் மற்றும் அடையாளக் குறியீடுகளை இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும்.

**40.** தொழில் முனைபவர் ஒரு படைப்பாளியாக **(புதின படைப்பாளி)** சீரான முறையில் ஏதேனும் ஒரு புதுமையை புகுத்த வேண்டியது அவசியமாகிறது. **–1934ஆம் ஆண்டு வாழ்ந்த ஹீம் பீட்டர்**

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

| 41.அ. நிபந்தனை | நம்புறுதி |
|---|---|
| இது ஒப்பந்தத்தின் கருப்பொருளாகும். | இது ஒப்பந்தத்தின் துணையாகும். |
| ஒப்பந்தத்தில் நிபந்தனையை மீறுவது ஒப்பந்தத்தையே மீறுவதாகக் கருதப்படும். | நம்புறுதியை மீறுவது ஒப்பந்தத்தின் மீறுவது ஆகாது. |
| நிபந்தனை நிறைவேற்றாமல் உரிமை மாற்றம் நிகழ முடியாது. | நம்புறுதியை நிறைவேற்றாமல் உரிமை மாற்றம் நிகழலாம். |
| நிபந்தனையை மீறினால் ஒப்பநதத்தால் பாதிக்கப்பட்ட நபர் ஒப்பந்தத்தை நீக்கிக் கொள்வதுடன் நட்டஈடு கோரும் உரிமையைப் பெறுகிறார். | நம்புறுதியை மீறுவதனால் ஒப்பந்தத்தில் பாதிக்கப்பட்டவர் நட்டஈடு கேட்கும் உரிமையை மட்டுமே பெற்றுள்ளார். |

**41.ஆ. ஏதேனும் ஐந்து அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தினை விளக்குக?**

**ஸ்டாட்டப் இந்தியா:-** தொடக்க நிலையில் உள்ள தொழில்களுக்கு ஆலோசனை வழங்குவது, வளர்ப்பது, ஆதரவு அளிப்பது. 2016ல் துவங்கியது.

**இந்தியாவில் தயாரிப்புத் திட்டம்:-** இதன் மூலம் இந்தியாவை பன்னாட்டு உற்பத்தி மையமாக மாற்ற உதவி செய்யப்படுகிறது. 2014ல் துவங்கியது

**அடல் புதுமை புகுத்தல் திட்டம்:-** பன்னாட்டு தரத்திற்கு இணையாக புதுமையான பொருட்களை வடிமைப்பது, ஊக்குவிப்பது, வளர்ப்பது ஆகும்.

**ஜன்தன் - ஆதார்- மொபைல் திட்டம்:-** அரசுத் திட்டங்களில் பயன் பெற்று வரும் பயனாளிகளுக்கு சேர வேண்டிய மானியத்தை நேராக அவர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்படுகிறது.

**டிஜிட்டல் இந்தியா:-** அனைத்து அரசின் சேவைகளும் பயனாளிகளுக்கு மின்னணு முறையில் வழங்கப்படுகிறது.

**42.அ. மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவாதிக்க.**

**நிதிப்பிரச்சனை:-** மகளிர் தொழில் முனைவோர்களுக்கு தங்களின் தொழிலில் ஏற்படும் நிதிப்பற்றாக்குறையை சமாளிப்பது மிகப்பெரிய சவாலாக உள்ளது.

**ஆதரவு இன்மை:-** கணவன், பிள்ளைகள், பெற்றோர்கள், நண்பர்கள் அருகில் வசிப்பவர்கள் என பலரின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.

**கடும் போட்டி:-** மகளிர் தொழில் முனைவோர்கள் தொழில் கடுமையான போட்டியை எதிர் கொள்கின்றனர்.

**கல்வியறிவு இன்மை:-** குறைவாக படித்துள்ள மகளிர் தொழில் முனைவோர்கள் தொழில் தொடர்பான கருத்துக்களை முழுவதுமாக புரிந்து கொள்ள முடியவில்லை.

**சார்ந்து வாழும் கலாச்சாரம்:-** பல சம்பவங்களில் மகளிர் தன் வாழ்நாள் முழுவதும் நம் நாட்டில் பிறரை சார்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

**42.ஆ. புவியியல் அடிப்படையில் சந்தை:**

**குடும்பச் சந்தை:-** குடும்பத்தின் உறுப்பினர்களிடையே பொருட்களை பரிமாற்றம் செய்வது.

**உள்ளூர் சந்தை:-** ஒரு குறிப்பிட்ட பொருளுக்காக வாங்குவோரும் விற்போரும் உள்ளூரிலேயே பங்கேற்பது,

**தேசிய சந்தை:** பண்டங்கள் மற்றும் பணிகள் ஒரு நாட்டின் பல்வேறு மூலை முடுக்குகளிலும் கிடைக்க அமையப் பெற்ற சந்தை தேசிய சந்தை ஆகும்.

**பன்னாட்டு சந்தை:** பண்டங்கள் அல்லது பணிகளை பன்னாட்டு அளவில் சந்தையிடுகை செய்வதனை பன்னாட்டு சந்தை அல்லது உலகளாவிய சந்தை எனலாம்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

**43.அ. நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்?**

**அதிகவிலைக்கு விற்றல்:-**பொருளின் விலையைவிட கூடுதலானவிலையில் விற்று நுகர்வோரை ஏமாற்றுகின்றனர்.

**கலப்படம்:-** உணவுப் பொருட்களில் உடலுக்கு கேடு செய்யும் பொருட்களை இலாபத்துக்கு ஆசைப்பட்டு கலப்படம் செய்கின்றனர்.

**போலியான பொருட்கள்:-** மக்கள் மத்தியில் பிரபலமாக உள்ள பொருட்களை போலியாக செய்து விற்று நுகர்வோர்களை ஏமாற்றுகின்றனர்.

**செயற்கை பற்றாக்குறை:-** வியாபாரிகள் பொருட்களை இருப்பு வைத்துக் கொண்டு இருப்பு இல்லை என செயற்கைப் பற்றாக்குறையை ஏற்படுத்தி இலாபம் ஈட்டுகின்றனர்.

**தரக்குறைவு:-** கட்டுமானம் செய்து விற்கப்படும் பொருட்களைத் திறந்து பார்த்தால் பல சமயங்களில் தரம் குறைந்த பொருட்களே இருக்கும்.

**43.ஆ. பங்குநர்கள் கூட்டங்கள்:**

நிறும பங்குநர்களால் நடத்தப்படும் கூட்டங்கள் பங்குநர்கள் கூட்டம் என அழைக்கப்படும்

நிறும பங்குநர்கள் கூட்டங்களை மூன்று வகையாக பிரிக்கலாம்

**சட்டமுறை கூட்டம்** நிறுமச் சட்டப்படி ஒவ்வொரு பொதுநிறுமமும் தொழில் தொடங்கிய தேதியிலிருந்து ஆறு மாதத்திற்குள் பங்குநர்கள் கூட்டத்தை கூட்ட வேண்டும். ஒரு பொது நிறுவனத்தின் வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே கூட்டப்படும் கூட்டம் சட்டமுறை கூட்டமாகும்

**ஆண்டு பொதுக்கூட்டம்:** ஒவ்வொரு ஆண்டும் நிறுமத்தில் இயல்பான நடவடிக்கை குறித்து ஆலோசிக்க கூட்டப்படும் கூட்டம் ஆண்டு பொதுக்கூட்டம். இக்கூட்டம் நிறுமம் பதிவு செய்யப்பட்ட தேதியில் இருந்து 18 மாதத்திற்குள் முதல் ஆண்டு பொதுக்கூட்டத்தை கூட்ட வேண்டும். அடுத்த ஒவ்வொரு ஆண்டும் இக்கூட்டத்தை கூட்ட வேண்டும். இரண்டு ஆண்டு பொதுக்கூட்டத்திற்கு இடைப்பட்ட காலம் 15 மாதத்திற்கு மிகக் கூடாது.

**சிறப்பு கூட்டம்** சட்டமுறை கூட்டம் மற்றும் ஆண்டு பொதுக்கூட்டம் ஆகியவை நிறுவனத்தின் இயல்பான சாதாரண கூட்டங்கள் ஆகும் சட்டமுறை கூட்டம் மற்றும் ஆண்டு பொதுக்கூட்டம் ஆகிய இரண்டையும் தவிர பிற கூட்டங்கள் அனைத்தும் சிறப்பு கூட்டங்கள் என அழைக்கப்படுகிறது

**44.அ. ஆட்சேர்ப்பின்முறையில் உள்ளபுறவளங்கள்**

**நேர்முகத் தேர்வு:-** வேலை தேடி வருபவர்களை நேர்முக தேர்வின் மூலம் பணியமர்த்தலாம்.

**வளாகத் தேர்வு:-** கல்வி நிறுவனங்களுக்கு நேரடியாக சென்று தகுதியுடையவர்களை தேர்வு செய்யலாம்.

**தொழிற்சாலை வாயிலில் ஆட்சேர்ப்பு:-** பொதுவாக சாதாரண அல்லது தற்காலிக திறனற்ற ஊழியர்கள் இந்த வழியின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றன.

**போட்டி நிறுவனங்கள்:-** உயர் ஊதியம் மற்றும் அதிக பலன்கள் வழங்குவதன் மூலம் போட்டி நிறுவனங்களில் உள்ள திறமையான பணியாளர்களை தம்முடைய நிறுவனத்தில் பணியாற்ற ஈர்க்கும் செயல் பணியாளர் வேட்டை என அழைக்கப்படுகிறது.

**வேலைவாய்ப்பு இணைய தளங்கள்:-** வேலை வாய்ப்பு இணைய தளங்கள் மூலம் தகுதியுடைய பணியாளர்களை உலகளவில் இணையத்தின் வாயிலாக பெறலாம்.

**44.ஆ. மனிதவள மேலாண்மையின் மேலாண்மை பணிகளை விவரி?**

**திட்டமிடுதல்:-** என்ன செய்ய வேண்டும், எப்படி செய்ய வேண்டும், யார் செய்ய வேண்டும் என்பதை முன்கூட்டியே தீர்மானிப்பது திட்டமிடுதல் எனப்படுகிறது.

**அமைத்தல்:-** பணியாளர்களிடையே வேலைப் பகிர்வினை ஏற்படுத்துவது அமைப்பாகும்.

**இயக்குவித்தல்:-** பணியாளர்களுக்கு ஆணைகள் குறிப்புகள் வழங்கி வழிகாட்டுதல், ஊக்கமூட்டுதல் மற்றும் மேற்பார்வை செய்தல் போன்றவற்றில் இது ஈடுபடுகிறது.

**கட்டுப்படுத்துதல்:-** திட்டமிட்டபடி பணிகளை பணியாளர்கள் செய்கிறார்களா என்பதை அறிய கண்காணிப்பு, மேற்பார்வை செய்து கட்டுப்படுத்துகிறது.

**45.அ. சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சி**

**பண்டமாற்று முறை:-** பண்டங்களுக்கு இணையாக பண்டங்களை மட்டுமே மாற்றிக் கொள்ளுதல்.

**உற்பத்தி சார்ந்தது:-** நுகர்வோரின் விருப்பங்களுக்கு மாறாக லாப நோக்கத்தோடு அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டது.

**விற்பனை சார்ந்தது:-** விற்பனையே ஒரு முற்போக்கு காரணியாக கருதப்படுகிறது.

**சந்தையிடுகை சார்ந்தது:-** விற்பனை செய்ய வாடிக்கையாளர்களின் முக்கியத்துவம் உணரப்பட்டது.

**நுகர்வோர் சார்ந்தது:-** நுகர்வோருக்கு சுவை, விருப்பம், மனநிறைவு ஏற்படுத்துவதற்கு பொருள்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

**45.ஆ. நுகர்வோரின் கடமைகள்**

**தரமான பொருட்களை வாங்குதல்:-** பொருட்களை வாங்குவதற்கு முன்பு அதனைப் பற்றி முழுமையான விவரங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

**பொருட்களின் எடை அளவு உறுதி செய்தல்:-** பொருட்களின் அளவு, எடை இவற்றை வாங்கும்முன் உறுதி செய்ய வேண்டும்.

**விவர அட்டைகளை படித்தல் :-** பொருட்களின் விவர அட்டைகளை முழுமையாக படிக்க வேண்டும்.

**தவறான விளம்பரம் மீது எச்சரிக்கையாக இருத்தல் :-** விற்பனையாளர்கள் அளிக்கும் தவறான விளம்பரங்களில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

**ரொக்க இரசீதை உறுதி செய்தல்:-** பொருட்களுக்கான இடாப்புடன் ரொக்க இரசீது, உத்திரவாத அட்டை போன்றவற்றை பெறுவது நுகர்வோரின் கடமையாகும்.

**46.அ. மேலாண்மையின் முக்கியப் பணிகள்**

**திட்டமிடல்:-** முன் கூட்டியே முடிவெடுத்தல்.
வருங்கால தேவைகளை பூர்த்தி செய்ய மதிப்பிடுதல்.

**ஒழுங்கமைத்தல்:-** உறுப்பினர்களிடையே இணக்கமாக உறவை ஏற்படுத்துதல்.
பணியாளர்களுக்கு சரியான பணிகளை வழங்குதல் மற்றும் பொறுப்பு ஏற்றல்.

**பணி அமர்த்துதல்:-** பணிக்கேற்ப பணியாளர்களை தேர்ந்தெடுத்தல்.
குறிப்பிட்ட கால இடைவெளியில் பயிற்சி அளித்தல்.
பணியாளர்களின் செயல்திறனை மதிப்பீட்டு ஊக்கம் அளித்தல். (பணப்பலன், பதவி உயர்வு)

**இயக்குவித்தல்**
இலக்குகளை அடைய தொடர்ச்சியாக வழிகாட்டுதல்
கூட்டம், கையேடுகளை, சுற்றறிக்கை போன்றவை மூலம் தகவல்களை அளித்தல்.

**ஒருங்கிணைத்தல்:-**
பல்வேறு திறமையுள்ள நபர்களை இணைத்தல்.
அனைத்து செயல்பாடுகளையும் இணைத்தல்.

**46.ஆ. தாராளமயமாக்கலின் நன்மைகள்**

தாராளமயமாக்கலின் மூலம் வெளிநாட்டு முதலீடு அதிகரிக்கிறது.
அந்நிய செலவாணி மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தி அந்நியச் செலவாணியின் இருப்பை அதிகப்படுத்துகிறது.
ஒரு நாட்டின் அளவுக்கு அதிகமான உற்பத்திக்கும் நுகர்வுக்கும் வழிவகை செய்கிறது.
ஏற்றுமதி, இறக்குமதி தீர்வைகளை நீக்குவதன் மூலம் நுகர்வோர்களுக்கு குறைந்த விலையில் பொருட்கள் கிடைக்கிறது.
உலகமயமாக்கலினால் வெளிநாட்டிலிருந்து பெறப்படும் வர்த்தக கடனின் அளவு குறைகிறது.

**47.அ. நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி**

**வேலைப்பகிர்வு** தொழிலமைப்பின் மொத்த பணிச்சுமையும் பகிர்வு செய்யப்பட வேண்டும்.

**ஒழுங்குமுறை** கீழ்படிதல் முறைப்படி நடத்தல், அதிகாரத்தை மதித்தல் ஆகியவை நிறுவனம் நன்கு நடைபெற அவசியம் ஆகும்.

**கட்டளையொருமை** ஒவ்வொரு கீழ் பணியாளரும் ஒரே ஒரு மேலதிகாரிடமிருந்து மட்டுமே கட்டளைகளை பெற வேண்டும்.

**ஆணையுரிமை வரிசை** ஆணையுரிமையின் வரிசை உயர்மட்ட அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்தில் உள்ள பணியாளர் வரை படிப்படியாக கீழ்நோக்கி வர வேண்டும்.

**ஊதியம்:-** ஊதியம் என்பது பணியாளர்களின் பணிக்கு கொடுக்கப்படும் விலையாகும்.

**47.ஆ. பல்வேறு வகையான நிதிச்சந்தைகள்:**

நிதிச்சந்தைகள் நிதிகோருதல் அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன.

**வகை:- கடன் சந்தை :-** கடன் கருவிகளை வணிகம் செய்வது (எகா) அரசு பத்திரங்கள்

**சமநிலை பங்குச் சந்தை:-** பங்குளை வணிகம் செய்வது (எகா) நிறும பங்குகள்

**முதிர்வு:- பணச்சந்தை:-** குறுகிய காலத்தில் முதிர்வு அடைவது (ஒரு ஆண்டுக்குள்) (எகா) கருவூலச்சீட்டு

**மூலதனச் சந்தை:-** நீண்ட காலத்தில் அடைவது (ஓராண்டுக்கு மேல்) (எகா) பங்குகள்

**வெளியீட்டுக்காலம்:- முதல்நிலைச் சந்தை :-** புதிய வெளியீடுகளுக்கான சந்தை

**இரண்டாம் நிலைச் சந்தை:-** ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை

**வழங்கல்:- உடனடிச் சந்தை:-** ஆவணமும், ரொக்கமும் உடனடியாக பெறுதல்.

**எதிர்கால சந்தை:-** ஆவணமும், ரொக்கமும் பின் ஒரு நாளில் பெறுதல்.

**அமைப்பு:- பரிமாற்றக வர்த்தகச் சந்தை:-** ஒழுங்கு நடைமுறைகளை கொண்ட அமைப்பு (பங்கு மாற்றகம்)

**உடனடி சந்தை:-** வழக்கமான நடைமுறைகளை கொண்டது.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com